72

ஸ்ரீ வேணுகோபால
பெருமாள் துணை.



5 JAN 193
MADRAS

கடம்பூர் சமஸ்தானம் பரம்புக்கோட்டை
விஸ்வப்பிரம வித்வசிரோன்மணி
முத்தமிழ் வித்வான்,
V. G. கோபால்சாமி கவிராயர்
அவர்கள் இயற்றிய,

# இங்கிதகான சங்கீத

# விஷ்ணு கியானம்.

## முதற்பாகம்.

ஷை யாரால்,
அருப்புக்கோட்டை
...கோட்டா பிரிண்டிங் பிரஸில்
...பிக்கப்பெற்றது.
[...ட்] 1930 [விலை அணா 6.

922.417
N30
176261

ஸ்ரீ வேணுகோபால பெருமாள் துணை.

கடம்பூர் சமஸ்தானம் பரம்புக்கோட்டை
விஸ்வப்பிரம வித்வசிரோன்மணி
முத்தமிழ் வித்வான்

## V. G. கோபால் ஆச்சாரி கவிராயர்

அவர்கள் இயற்றிய.

# இங்கிதகான சங்கீத

# விஷ்ணு கியானம்.

முதற்பாகம்.

அருப்புக்கோட்டை,
R. A. S. வெங்கிடசாமி ஆச்சாரி

சென்னமரெட்டியபட்டி,
A. P. பொன்னுச்சாமி ஆச்சாரி
இவர்கள் பொருளுதவியின் பேரில்

அருப்புக்கோட்டை,
அருப்புக்கோட்டா பிரிண்டிங் பிரஸில்,
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1930 [அணா 0-6-0

REGISTR
No.
JAN 1931
MADRAS

உ

சிவமயம்

# சாற்றுக்கவிகள்.

கூத்திப்பாரை யென்னும் நல்லூர்

முத்துக்கிருஷ்ண ராமானுஜ தமிழ்ப்பண்டிதர்

அவர்கள் இயற்றிய செய்யுள்

ஆர்த்தனை நுண்ணியல் புணர்ந்தோ ரகமகிழ் கோபால
னெனும் அறிஞரேறு
பார்த்தனை நோக்கி பகவத்கீதைசொன்ன பரமாத்மன்
பதமென்பூவில்
கீர்த்தனையா ரமிர்தமெனக் கிளற்றினன் சங்கீதம்
கெளீயபாடல்
நீர்த்தனையார் பயின்றார்கள் யாள் மகதி நாரதரென்
றியம்பலாமே.

1947
784.0954

---

குருந்தமடம் கிராமத்திலிருக்கும்

மூ. மல்லய்ய நாயக்கரவர்கள் இயற்றிய

வெண்பா.

வான்புகழ்சேருங் குருந்த மாநகரிலே மாப்பாய்த்
தானிருந்து நன்மை புரி சாபளன் மேல்—தென்மொழியால்
கோபாலதாச னன்பாய்க் கூறிய நற்கீர்த்தனையைப்
பூபாலார் ஆரமெனப் பூண்பர்.

---

சாத்தூர் தாலுகா மேட்டுப்பட்டி கிராமத்திலிருக்கும்
சங்கீத வித்வான்
## சிங்கமாசாரி யாரவர்கள் இயற்றிய
சாற்றுச் செய்யுள்,

காமலர்த்தே மழையினிற்பெய் கழனியில் சென்
னெல் கன்னல் கதலிமுத்தின்
பூமகழ்பன் குருந்தநகர் வேணுகோபாலன் மிசை
புலவோர் மெச்சத்
தீமதுவிற் பால்பாகிற் கினிமையெனக் கீர்த்தனைபாச்
செய்தான் மிக்க
க்ஷேமமுறு விஸ்வகுல கோபால தாசனெனும்
ஜெயவல்லோனே

---

கூத்திப்பாரை யென்னும் நல்லூர்
கவிவீர நல்லானவர்கள் குமாரர்
## பாலகவி சின்னச்சாமி ஆச்சாரியாரவர்கள்
இயற்றிய வெண்பா.

ஆம்பலிக்கு விண்டு வலருமதி காணுவபோல்
தாம்பலிக்கு விண்டடியார் தான்மகிழத்—தேங்கீர்த்
தனங்கடந்தான் கோபாலன் சரணமாய் முன்பு
வனங்கடந்தான் தாளை வணங்கி

---

922.417
N50

உ



# இங்கிதகான சங்கீத

# விஷ்ணு கியானம்.

சடகோபர் காப்பு.

வெண்பா.

மங்களஞ்சேருங் குருந்த மாநகர்வாழ் மாதவன்மேல்
இங்கிதமாய்க் கீர்த்தனையென் றோதிடவே—துங்கமிகு
செய்யவ னென்னுளம்வழ் திருக்குருகை நாதனிரு
துய்ய மலற்றாளே துணை.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வடந்தனிற்கண் வளர்வானை வரைக்குடையா
யெடுத்தானை மலர்த்தாழானைத்
தடம்புவிபை யழந்தானைச் சக்கரஞ் சங்குடையானை
ஜகத்தின் டாப்கை
கடந்தவர்க ளுளத்தானைக் கரியமணி நிறத்தானைக்
கனவைகுந்தத்
திடந்தனிலே யிருப்பானை யேழைபங்கில் வருவானை
இறைஞ்சுவேனே.

இராகம் பயிரவி, தாளம் ரூபகம்.

ஆர் திரு குருந்தநகர் வாழும் பெரியோரே
வாழும் பெரியோரே
அந்தமிகு மெந்தன் சொல்லை
யன்புடன் கேழ்ப்பீரே ஆர்

அனுபல்லவி.

தார்மிகுந் துழவணிந்த சாமளசிங்காரன் மிகு
• கோமள கெட்பீரன் சந்ததமும் பக்தர்போற்றும்
சம்பிரம ஓய்யாரன் நெடுந்
தவணியோர்க்கருள் கருணைதந்திடு
திருமகிழ்ந்திடும் லோலன் வுயர்
தேவர்க்கனுகூலன் அனு
தினமும் கோபால தாசன் வணங்குஞ்
சிவன்புகழ்ந்திடு சீலன ஆர்

---

திருவண்ணமலை க்ஷேத்ரம் மகிமை.

இராகம் கமாஸ். தாளம் ரூபகம்.

மஹா ஸ்தலமு மதோ தெரிகுது—என்ற மெட்டு.

பல்லவி.

சுகாஸ்தலமு அதோ தெரிகுது மிக்க
துய்யா அய்யன் மெய்யாதி ருவணமலை (சு)

அனுபல்லவி.

ஜெகா தரப்புகழ் நாட்டி தெய்வ
சகாயமும் வம் மகான்வளரும் (சு)

சரணம்.

கந்தம் அரவிந்தம் மலர்ப்பாதன் — அடியவர்
சிந்தைதனில் வந்தேயருள் நீதன் —கடலொடு
கருமாமுகில் நிகர்சாமள
பெருமாள் துழவணிகோமள

கன்னல் கதிர்முத்தந்தரு
சென்னல் கழனிகள் சூழ்ந்திரு சு (திரு)
சங்கு சக்ராயுதமே யொளிர்கையன்—தரைதுதி
புங்கவனாகிய மணிமிகு மெய்யன்—அருள்மிகு
தேவகியருள் தவபாலன்
பூவுலகோர் துதிசீலன்
சர்ஜனர் சோடச பூஜைகள்
விர்ப்பனமோடு செய் பூஜைகொள் சு (திரு)
மாவிந்தையாகவே கோவிலைநாடி—மனிதர்கள்
கோவிந்தநாம சங்கீர்த்தனம்பாடி—அநுதினம்
அரிகரியெனு மொலிசத்தம்
முரகரி யென்றுமே நித்தம்
மாபாரதமிசை வந்து விளங்கும்
கோபாலதாச னனுதினம் வணங்கும் சு (திரு)

---

இராகம் பிலகரி தாளம் ரூபகம்

கோண்டுவோ மயிலே என்றமெட்டு

பல்லவி.

திருவருள்புரிவாய்—சிறுவன் யானுந்தன்
திருவடிமலர்த் தொழுதிடவே (திரு)

அனுபல்லவி

சீதாமனமகிழும்
நாதாபார்புகழ் வி
நோதா ஜெகவரதா (திரு)

சரணம்

அந்தரத்தேவர்களிந்திரனும் நிதம்
சிந்தையில் நின்புகழ் பாடுவோர்கள் கீதம்
தீரா—பரிமளகெம்

பீரா—துளவணிசிங்

காரா—ஏழை யென்மேல்

திங்களணிந்த சிவன் புகழ் சீலனே

பொங்கமிகு கோபாலன் பணி சீலனே

பூமா—வருள் தருநன்

சேமா—ஆதிபரந்

தாமா—இந்தவேளை (திரு)

---

இராகம்—சிமேந்த்ரமத்திமம் தாளம் ரூபகம்

கானலோலன் கவுரிபாலன்—என்ற மெட்டு.

பல்லவி.

சோதைபாலன் சுமுகசீலன்

சீலதலோலன் திருக்குணாளன்

சோமா க்ஷேமா பூமா (சோ)

துழாயணிந்திடும் வரதா (சோ)

ஜோதியே சுந்தரம் மிஞ்சிய

ஆதியே செந்திரு கொஞ்சிய (சோ)

தொழுவோர் தம் மீதினிலே

வழுவாது நின் னருள்மாலே (சோ)

தொண்டர் துதி கொண்டிலகு மலர்ப்பாதா

பண்டுபுவி யுண்டவரி தேவநீதா (சோ)

துங்கமிகுந் தொல்லுலகோர் பணிபாதா

பொங்கமிகு பூமகள்மார் பணிகாதா (சோ)

துய்யசெழுங்கமலத் தய்யன் தினம்

வணங்கும் செய்யாள் மனமகிழும் (சோ)

சுமுகசுகன் சுருதிககன்

சுகுணதேவன் சுரர்தபனன் (சோ)

சுகாவாசுதேவசாதுமகா தர்மயைந்தர் தூது (சோ)

அனுபல்லவி.

கீதை சாரன் புவிக்கோராதவன்
சித்தர் முதலிய பக்தர் துதிசெயும்
முத்தர் வணங்கிடும் அத்தன் தினம்புகழ் (சோ)

சரணம்.

சித்தி பேரின்ப மளிக்குங் குணாளன்
ஜெகமதில் யாவரும் போற்றிடுஞ்சீலன்
பக்திமிகும் ஸ்ரீ கோபாலன் தினமும்
பாடும் டங்கயப் பாதன்
நாடும் புங்கவர் நீதன்
கூடும் மங்கள சுபங்
தேடுந் தேவர்கள் தொழும் (சோ)

---

தோனித்திடு சங்கம்—என்ற மெட்டு.

பல்லவி.

திகழ்மலர்ப்பாதா திருநாரணா
சீதா சமேதா விநோதா ஜெகமதி துதி (திக)

அனுபல்லவி

புகழ்மறை முடிமேலா புங்கவர்க் கனுகூலா
பூமா ஸ்ரீராமா நன்னேமா புலவர்கள் பணி (திக)

சரணம்.

பாரில் புகழ் மிகுந்த பாவையசோதைதந்த
பாலா கோபாலா குணசீலா பாஞ்சு—ரெணுங் (திக)
மேன்மைபனுவல் சாற்றும் மெய்யன் கோபாலன் போற்றும்
வேதா சொல்நீதா க்ருபைதாதா விரைமிகுசெழுங் (திக)

இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி
கதர் கப்பல் கோடிதோணுதே—என்ற மெட்டு.

பல்லவி.

திருவண்ணாமலை வரதா
சித்தம் வைத்தெந்தனுக்கு நித்தம் வந்தருள் வீரே திரு

அனுபல்லவி.

மருமலி கமலப்பாதா மலர்மகளுக்கு நாதா
மணமிகு வனசேலதா வணங்கும் ஸ்ரீ ரங்கநாதா திரு

சரணம்.

மாதாபிதாவும் நீரே வணங்கினேனருள்வீரே
மறந்து இருப்பார்யாரே வரந்தரும் கடவுளே
வந்தென்னேனே முகுந்தனே—நான்
நாடும்போதினில்வந்து கூடிவரந்தருவீர் திரு
பண்டரிபுரவாசா பாக்யந்தருவாயீசா
பார்த்தனுக்குபதேசா பசுமரகதப் ரகாசா
பத்மநாபா பசுந்துளபநீபா
பத்மினியசோதைசேயா வுத்தமிசீதைநேயா திரு
பண்ணவர்போற்றுஞ் சீலா பாஸ.வருக்மணிலோலா
பக்தன்கோபால்க்கநுகூலா பரமன்புகழும்கோலா
பார்மின்னேசா பதமருள் சர்வேசா
பஜனமிர்தப்ரவாமா தசாவதாரா ஸ்ரீ ராமா திரு

---

பாற்காவடி'யானந்தம் —என்ற மெட்டு.

பல்லவி.

சீத்தாவரிகோவிந்தன் திருவடி
சேவையுங்கண்டேன் கண்டேன் (சீத்)

அனுபல்லவி

பார்த்தனுக்கீதன் பண்டரிவாழும் நாதன்
கார்த்தருள் குணநீதன்
கந்தமிகும்மா விந்தம்போற்பாதன் (சீத்)
தேவர்க்கோராதான் செய்யவள் மனோகரன்
பூவை சோதை குமாரன்
பொங்கரவம்மணி சங்கரன் புகழ்ந்திடுந் (சீத்)
பக்தி விசுவாசன் பாலன் கோபாலதாசன்
பாமாலையணி யீசன்
பண்டளை யுண்டிடு மெண்டிசையோர்பணி (சீத்)

சத்யமென்னும் மேதளர நாடு—என்ற மெட்டு.

கண்ணிகள்.

சத்யபாமை மங்கை மகிழ் நேசா—நெடுந்
தாரணியோர் பணியும் வாசா—சிவ
அத்தன் புகழும் விசுவாசா—அருள்
ஆதியே சாமளப்ர காசா (சத்)
எத்திசையோர் போற்று மரி ராமா—இந்த
ஏழைக்கிரங்கிடுவாய் தாமா—அரி
பக்தன் கோபாலன் தொழும் க்ஷேமா—வுந்தன்
பாதம்நிழல் தருவாய் பூமா (சத்)
விண்ணவர் தமக்குகந்த சீலா—செய்ய
வேதா தினம்பணியும் கோலா—மலர்க்
கண்ணா அசோதையருள் பாலா—வுந்தன்
காக்ஷி தருவாய் திருலோலா (சத்)

எதிரே வர வேணும்—என்ற மெட்டு.

இராகம் கமாஸ் தாளம் ஆதி

பல்லவி.

தருணம் வரவேணும்—வாந்
தந்தருள் புரிய இத் (தரு)

சந்த அனுபல்லவி.

திருநேசா வரதா திகழ் செழு மருமலர்ப்பாதா (தி)
திரிலோகம் பணி பரமேஸ்வரன் புகழ் (தி
தீனரக்ஷகா ஞான சற்குண (தி)
திகழு திருமலை விமலா மக சுகுண (தி)
சீதரா மோதரா ஸ்ரீ ஹரி நாரண (த)

சரணம்.

அந்தரதேவர் தொழு மிந்திரனுஞ் சகல
கெந்திருவர் முனிவர் விந்தைசேர் கமல
அயனை சிருஷ்டி செய்தாய்—அரக்கர்களை
புயஞ்சிரசைக் கொய்தாய்
ஆதிநாதா சோதிநீதா—அகிலமது
பணியுந்தாதா
அமரர்தேவா சுமுகனேவா—உனதுதிரு
அடியர் போற்றிடும் புனிதபுங்கவா
அநுதினம் கோபாலன் கனவிலும் போற்றினேன் (த)

தசரத ராஜ குமாரா என்ற மெட்டு.

பல்லவி.

பங்கய மாமலர்ப்பாதா ரெகுநாதா
குணநீதா அருள் தாதா

அனுபல்லவி.

புங்கவர் பணிந்திடும் புனிதலங்காரா
புகழ்மிகு தேவரிடற் தீர்த்தகெம்பீரா
செங்கையிலாழிசங் கேந்துமெய்யாரா
தேவகியாள் மகிழ்பாலா திருலோலா
அநுகூலா அருள்சீலா (பங்)

பல்லவி.

பண்டரிபுரமதில்வாசா ஜெகதீசா
ஐவர்நேசா பவநாசா

அனுபல்லவி

பக்தர்கள் பணிந்திடும் பரமதயாளா
பார்மகளொடு திரு பாவைமணாளா
நித்தன் புகழ்ந்திடும் நேமகுணாளா
நிமலனையிது ததிவாரும் நிதிதாரும்
அருள்கூறும் எனைக்காரும்

பல்லவி.

தேன்மொழி சோதையின் சேயா
அருளாயா துவர்வாயாதிட தூயா

அனுபல்லவி

திசல்மிகுவரிசிலை யேந்தியகைய்யா
ஜெகமதில் யாவரும் போற்றிடும்துய்யா
தினமுங்கோபால் தாசன் சேவைசெய் மெய்யா
சித்தம்வைத்தே முறைகேளாய் மெய்யனையாளாய் மலர்த்
தாளாய் திருத்தோளாய் (தே)

---

தயவில்லாத தேஞேவஞ்சம் என்ற மெட்டு

பல்லவி.

பக்தர் போற்றும் பரந்தாமா—யெழில்
பாவை ஜானகியின் பூமா ராமா (பக்)

அனுபல்லவி.

சித்த ரேற்றிடுந்தற் பரனே—இந்தச்
சிறுவன் மீதினில் மனமிரங்கியே
திருவருள் புரிதுயெந்தனையாள் (பக்)

சரணம்.

பாதாரந்துணை யன்றிப் பாரினிலேது
பக்தி முத்தியருள் பாலனுக்கோது
சோதை தலத்தில் வந்தவாதா—திகழ்
துங்கமே மிங்கு கங்கைசோதரா
சுமுகமே கோபாலன் பணிந்திடும் (பக்)

---

சேந்தூரிடந் துலங்கும் ஸ்ரீ மானே என்ற மேட்டு.

பல்லவி.

செந்தாமரை மலர்வாழ்—திருநேசா—வுயர்

அனுபல்லவி

சீர்வளஞ் சேருந்துவபா புரீவாசா (செந்)

சரணம்.

நந்தா மு குந்தமாயா
நங்கை ருக்மணி நேயா
விந்தை யசோதை சேயா
விடுத்து கணை தொடுத்தவுணர்
துடித்திடவும் அடர்த்துநெடும்
படிப்பிலுனை பணிப்பரிடர்கலைத்துவரம்
கொடுத்து ருளும் (செந்)

கானகம் ந டந்தசீலா
கௌசலை ம கிழும்பாலா
தேன்மொழி சீ தை குணாளா
திடத்தனுவை யெடுத்தவுடன்
வடிக்கணை தொடுத்தசுரர்
படச்சமர்விளைத்தில குதிடத்தச
ரதப்புதல் வா (செந்)

பாண்டவர்க்கு கந்த நேசா
பாலன் கோபால் போற்றும்வாசா
வேண்டு ஞா னபிதேசா
விருந்தவனநிகர் குருந்தநகர் மிசை
யிருந்துபணிபவர் திருந்தவரமருள் (செந்)

இராகம் கேதாரகௌளம் தாளம் ரூபகம்

ராமநாமமே தெய்வீக—என்ற மெட்டு.

பல்லவி

ஆதிமூலமே சாயுச்யம் அருளு மந்திரம்
அடியவர் பணிந்திடும் (ஆதி)

அனுபல்லவி.

மேதினியெல் லாம்புகழ்ந்திடும்
விண்டுமா கொண்டல்நேர் விகசிதசாமள (ஆதி)

சரணம்.

மானிலமியாவு மளந்திடுமாயன்
மன்னுபுகழ்பெறு பாண்டவர்நேயன்
தேன்சொலசோதை யருந்தவச்சேயன்
செந்திருவந்திடும் ஜெகமதிலுயபாருள் (ஆதி)
அருந்தவமாமுனி வேள்வியைக்காத்து
அல்லிகோன வரக்கியை மாய்த்து
கருங்கல்லதனை ரியர் பெண்ணாகப்பார்த்து
கமழ்பதத்துகழ்பெய்த கருணையங்கடலெனும் (ஆதி)
திண்டியஜனகன் தந்தவில்லொடித்து
சீதையின் மீதிலன் பாய்மணமுடித்து
வன்மைசேர் சிற்றன்னை வாக்கியம் பிடித்து
வனமதில் கனமதாய் மரவுரி யொடுவரும் ஆதி

தாரணியாள் பாதுகை தம்பிக்கீய்ந்து
சார்பாய் லக்ஷ்மணனும் சீதையும்போந்து
நேராய்வருக வனமதில் சேர்ந்து
நெடுஞ்சுரங்கடந்தருள் நெடியவனெனுமரி ஆதி

தண்டகாரண்ய வனமதில் மேவி
தங்கிடும்போது முனிவருங்கூவி
கொண்டல்வண்ண வென்னையாளெனச்சேவிக்
கும்பொழு தன்புடன் குறைதவிர்த்தருள்புரி ஆதி

பன்னகசாலையில் தங்கிடும்போது
பாவி சூர்ப்பநகை வந்துந்தன் மீது
நன்னயமாய்ச்சேரு மென்றுமே வாது
நலமிலாள் சொலகபோ லமதுடன் முலைதுணி ஆதி

மாரீசன் வந்துபொன் மானுருக்காட்ட
மங்கைபிடித்துத் தருமென நாட்ட
ஆருவனத்தை யது கடந்தோட்டம்
ஆகவே போகவே அதுபட கணைதொடு ஆதி

அத்ததிகண்டுமே ராவண சந்யாசி
ஆகவே சீதைமுன்வந்து மொழிபேசி
எத்துடன் தேர்மிசை யேகிடவாசி
ஏகிடவாகுடன் இலங்கையிலிடவடற் (ஆதி)

வஞ்சகராவண னுருயிர் மாட்டி
மாமகுடமவன் தம்பிக்குச் சூட்டி
கஞ்சமலர்ச்சீதை யைச்சிறைமீட்டி
கடிநகரிடம்வரு கருமுகில்ரகுபதி (ஆதி)

தக்க வயோத்தியில் மாமுடி பூண்டு
தம்பியர் சூழவே தாரணியாண்டு
மிக்ககோபால தாசர்க்கருள்பூண்டு
வேணுகோபாலமால் வியன்குருந்தநகர் (ஆதி)

Q22:417 N30
176261

எழுசீர்கழி நெடி லாசிரிய விருத்தம்.

சீதாமனோகரா செழுமணிவசீகரா
தேவாதி தேவ தீரா
சித்தர்முனி வோர்பக்தர் முத்தர்கள் வணங்குபத
தீனரக்ஷகவை குந்தா
மாதா நிகர்த்து முலை தந்தபூதகியாவி
மடியவமு துண்ட விமலா
மணமிகுந்துளபமா லிகை புனையுமார்பனே
வயினதேயன் வாகனா
பாதாரவிந்தமே தஞ்சமெனவந்தஎன்
பாவங்கள் தீர்த்துவிரைவாய்
பரமபதமீதிலே சுரர்களொடு வாழநின்
பங்கயக்கண் ணோக்குவாய்
வேதாவையீன்றமலர் நாபாசுபாவகுண
மிக்கதேவகி பாலகா
வேணுவாய்வைத்தூதி ஆனிரைகள்கூட்டு
நம் வெங்கிடேஸ்வர மூர்த்தியே

---

இராகம் அடாணா தாளம் ஆதி.
பொன் கோதண்டா—என்ற மெட்டு.

பல்லவி.

அளைபாலுண்டாய் அமலா ஆயர்பாடியில்

அனுபல்லவி

மளைமெய்கொண்ட வாமா ராமா
மலர்ப்பாதா திருநாதா குணநீதா
நவனீதமோடு (அளை)

சரணம்

பங்கேரு காமின்னேசா
சிங்கரூ பாசர்வேசா
மங்காநின் கீர்த்திபேச

வரமேபுரிந்த திருவாய்திறந்து (அளே)
நந்தவை குந்தவாசா
மந்த்ரரூ பப்ரகாசா
சிந்தாகு லந்தீரீசா
சீதாசமேத வேதா சொல்நீதா (அளே)
சீலா கோபால தாச
மேலாய்க் கவிதைபேச
கோலாகலா நல்தூசு
கொடுபோய் க்குருந்தயிடமேயிருந்த (அளே)

---

சுருளிமலை மீதில் வாழும்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

திருவளர் துவராபுரி வாசா—புவி
செய்யவள் தனக்குகந்த நேசா—பிரு
செங்கைமிசை யாழிவளை துங்கமுடனேந்திநிற்குந்
தேவா பத்ம நாபா திரு
மருமலி பசுந்துளபத் தோழா—இந்த
வைய கமழந்த மலர்த்தாழா—எனை
வாழ்விப்பது உன்கடமை யாமித்தனே பராமுக
மாமா பரந் தாமா திரு
பார்புகழ சோதையகிழ் சேயா—பஞ்ச
பாண்டவர்க் குகந்த அதி நேயா—நெடும்
பாவதனே யோரடியி லோர்கணத்திலே யளந்த
பாதா திரு நீதா திரு
கொங்குயர் துளாயணியுந் தோழா—எனைக்
குன்னருள் கொடுக்க வெகு நாளா—தினம்
கோபாலதாசன் பணியுங் கோபாலா யெனைக்கடைக்கண்
பாராய் அருள் தாராய் திரு

---

ஆலவாய் மதுரைபுரி நகர்—என்ற மெட்டு.

பல்லவி.

பங்கயாசன ஸ்ரீ தரா—திருப்
பாவை யசோதை சுதாகரா பங்

அனுபல்லவி.

பாவை யசோதை சுதாகரா யென்னைப்
பாதுகார் கருணாகரா பங்

தொகையறு

கோலாகலம்பெரு கோபிகா ஸ்திரீகளின்
குஜாலிங்கன மிருகனே
குறைவிலாப் பாரதம் நடத்திடும் பார்த்தனுக்
குபகாரனை சுகுண

பல்லவி

மங்களாகர செஞ்சொல்மாலை
வழுத்தினேனருள் மாதவா மங்

அனுபல்லவி.

வழுத்தினேனருள் யாதவாக்ருபை
ஜொலித்திடக் கரு ணாதவா மங்

தொகையறு.

தசரத சுதாகரா ஜானகி மனோகரு
தற்பர யோக முதல்வா
விஸ்வகுல கோபால தாசன் தினம் பணியும்
வேணு கோபால விமலா

பல்லவி.

ஆதிமூலமென் றோது மானையை
ஆண்டவா யென்னை யாதரி ஆதி

அனுபல்லவி

ஆண்டவா யென்னை யாதரி பூணி
பூண்டவா வருள் ஸ்ரீ ஹரி ஆதி

8A
1-27

தோகையரு.

ஆலகால விடமுண்ட சங்கான் அன்றிறந்த
பலி தீர்த்தவா
ஆச்கள் மெய்த்து நல வேணு வாயில் வைத்தன்
று ஆதி நிரை சேர்த்தவா

பல்லவி.

கோதிலாமரை மேல் நடப்புரி
கொண்டலே வுனே யண்டினேன் கோ

அனுபல்லவி

கொண்டலே உனேயண்டினேனருள்
பண்டரி புர மாயனே கோ

---

தொழிலோன் தலே என்ற மெட்டு.

பல்லவி.

திருமேவிய திகழ்மணிமார்பனே
தேவகியருள் பவனே—தேவர்கள் தொழுந் திரு

அனுபல்லவி.

விரைசேர் குழல் ஜனகி மகிழ் லோலனே
விண்ணவர்க் கனுகூலனே—தேவர்கள் தொழுந் திரு

சரணம்.

பரமபதந் துவராபுரி வாசனே
பாண்டவர் குணநேசனே—பரந்தாமனே ப
திரள்மேவிய கோதண்ட மேந்திய
செங்கண் மாலச்சுதனே—தேவர் புகழுந் திரு
மாபாதக னெனு நீ பராமுகம்
வைப்பது நலமாமோ—சமமாமோ மா
கோபலெனுந்தாசன் தினம்பணியும்
கோவிந்த வைகுந்தனே—தேவர் புகழுந் திரு

---

முருகன் திருமால் மருகன் பெருமை—என்ற மெட்டு
இராகம் அடாணு தாளம் ரூபகம்.

பல்லவி.

பச்சைமணி யச்சுதன் தன் மகிமை—அந்தப்
பரமன் அநுதினமும் புகழ்
விரைசேர் துளவணியுந் திகழ் பச்

அனுபல்லவி

மச்சவடி வாகியே வேலையில்
மறைதேடிய கருணாகர
திருமேவிய வரிகேசவ பச்

சரணம்

வானவர்கோன் முதலேனையர் யாரும்
வணங்குமலர்ப்பாதன்—அரி
மாதவ ராகவன் சோதை சுதாகரன்
வரமருளுந் தாமன்
மய்யரு பங்கய மலர்மங்கை நேசன்
மானிலம் யாவையுங் காக்குஞ் சர்வேசன்
துய்யமிகுந் துவாரபுரி வாசன்
துங்கம் மிகு ரெங்கேசவன்
செங்கைதனில் சங்கேந்திய பச்

ஆதவகுல மணியாக ஜெனித்துசல்
லரசு புரிந்த பூமன்—வுயர்
அருந்தவ மாமுனி வேள்வியைக் காத்துமை
யரக்கியை வென்ற ராமன்
அந்தமிலாக் கல்லைப்பெண ணென்றழைத்தவன்
அன்புயர் ஜனகரின் தனுவை வளைத்தவன்
சிந்தைமகிழ் சீதாமணமு முடித்தவன்
சித்தந்தனில் பக்தத்துடன்
நித்தந்தொழும் கோபால்க்கருள் பச்

கழுகுமலைக்கு நாம் நேராய்—என்ற மேட்டு:
இராகம் டயிரவி தாளம் ரூபகம்.

பல்லவி.

சுந்தரஞ்சேசர் பரந்தாமா—பதந்
தொல்லுலகோர் பணி பூமா ராமா (சுந்

அனுபல்லவி

துலங்குதா தவிழ் துளவணி
யலங்கிர்தா வெழுடவி பணி (சுந்
சுருதிதங்கிய மருமணங்கமழ்
யிருபதாம்புயமது மகிழ்ந்தருள் (சுந்

சரணம்.

விந்தை பெருகுஞ் செந்தாமரைப் பாதனே
மேதினியோர் பணி சீதா சமேதனே
சந்தமிகும் பக்தருக் கருள் போதனே
சாரங்கமுங்கையி லேந்திய நீதனே
சமரம தனிலொருதி கிரியை
கமனரவி ரகமிரவி மேல்
சுமுகமுடனே விடுசுகுணனே
கமலமாவு புயவாதனே (சுந்
தேனினு மின்மொழி தேவகி பாலனே
தேவர்கள் போற்றும் ஸ்ரீ ராம பூபாலனே
செல்வடிவாக விழங்கிய கோலனே
சேயன் கோபாலுக் கருளனுகூலனே
திடமலை யேந்திய கையர்
கடிகமழ் துளவணி மெய்யா
படிமிசை யெவர் துணை அய்யா
பரகதி கொடுத்தருள் துய்யா (சுந்

---

கழுகுமாமலை மீதில் வாழ் முருகா—என்ற மெட்டு

பல்லவி.

திருவண்ணாமலை மீதில் வாழ்வி மலா

அனுபல்லவி.

சித்தர்முதல் பக்தர்களும்
நித்தம்புகழும் அமலா (திரு

சரணம்

சுந்த வைகுந்த வாசா
கருந்துளப மணியீசா
சுந்தரஞ்சேர் விஸ்வாசா
துங்கமிகும் பிரகாசா (திரு
தேவர்கள் போற்றுந்தீரா
சித்தர் தொழுந்திருமாரா
பூவுலகோர்க் குபகாரா
புகழ் கோபாலுக்கருள் தாராய் திரு

---

பாலாபிஷேகத் தூலா—என்ற மெட்டு.

இராகம் பியாக் தாளம் ஆதி

கண்ணிகள்.

பாண்டவர் தூதா செழும் பங்கயப்பாதா
ஆண்டியன் புகழுஞ்சீலா அய்யனே யசோதைபாலா
வேண்டினோர்க் கனுகூலா விமல கோபாலா தவ
விரத கபா வகுண பரத நய சரண (பாண்
வானவர் துயரைத் தீர்த்து
வண்மை வனமாலை கோர்த்து
தேவர் முனிவர் போற்ற சித்தாந்தம் பார்த்து தர்மம்
சிறந்த ஜோதி நிறைந்த நீதி (பாண்

அருந்தவன் வேள்வியைக் காத்து
அகலிகையின் சாபந் தீர்த்து
திறல்மிகுந் தனுவளைத்து திருமணம் முடித்து வுந்தன்
திருவடிபதமலர் தினமுங் கோபாலன் போற்றும் பாண்

---

மலடிவயற்று மகன்போலே—என்ற மெட்டு
திருப்புகழ்ச் சந்தம்.

தசரத மெபத்தவச் சுதராமா—திரை
சாகரமீதுகண் வளர்பூமா—யெழில்
தாரணியோர் பணியும் ராமா சுமகரநாமா
குஜமயில் கோசலை மகிழ்பாலா—நெடுங்
கோதண்ட மேந்திய கோபாலா—வருள்
கோவிந்தனே மறைமுடிமேலா மலர்திருலோலா
பஜனை செய் பண்டரி தனில்வாசா—தர்ம
பாண்டவர் துதிபுரியும் நேசா—வுன்னைப்
பாடும்படிக்கருள் செய்வா யீசா யெங்கள் பவநாசா
பசியதண்டுள பணிந்திடுமார்பா—தொண்டர்
பத்திமைக் கருள்மகிள் பிரதாபா—வுந்தன்
பதமலர் நிழல் தருவதிசார்பா திகள் மலர்நாபா
ஜானகியாள்மகிழ் மணவாளா—செழுந்
தாமரை மாமலர் நிகர்த்தாளா—வுந்தன்
தாசர்கள் பஜனைசெய் திருநாளா ருக்மணிதோழா
கோநிரைமுற்று மழந்தோனே—அண்ட
கோடிகளுண்டு வுமிழ்ந்தோனே—திருக்
கொடியொடு கானில்நடந்தோனே நம் பெருமானே
நாகத்தின் பேற்றுயில் மாயோனே—வுயர்
நாகத்தை யேந்திய ஆயோனே—பணி
நாகத்துக்கே யருளீன்றோனே புவிமுதலோனே

நகைசெயொழி மாதவ அதிகாரா—யெழில்
நல்குங் குருக்தநகர் பதிவீரா—வுன்னை
நய்புங் கோபாலனுக் குபகாரா ஜெயதிருமாரா

———

ராகம் பயிரவி தாளம் ரூபகம்.

வாவா மாதவனே—என்ற மெட்டு.

பல்லவி.

தேவா நீ வருவாய் அரிதேவா நீ வருவாய்—நல்ல
சிங்காரமான தேர் செங்கருடன்மீதில் (தே

அனுபல்லவி.

தேவா கீயாள் செய்தவக்குமாரனே (தே
திருவடி பத மலர் அநுதினந் துதி செய்தேன் (தே
சித்தர்முதல் பக்தர் தொழும் அத்தன் தினமும் புகழும் (தே
தேன்மொழி சீதைக்குகந்த கான்மிகுந் துளவணிந்த (தே

சரணம்.

பூவுலகோர் தினம் போற்றிடும் நாதனே
பூவை யழகிய சீதா சம்மதனே
வாமன கேசவ மாயா விநோதனே
மருமிகு மம்புய மாமலர்ப்பாதனே
வஞ்சக நெஞ்சக கஞ்சனை
துஞ்சிடவே சிறங் கொய்தவா
வந்தனை செயுங் கோபால்தாசன் முன்
வந்து கந்தார்வ பவிந்திட (தே

———

## பழனிநாதன்—என்ற பாட்டு.

சாயூச்ய பாக்யம் தாணிமேயார்க் கும்
மாக்ஷிவாகையான் ஜேகையான்
பஜனைநாதன் பாதகீதன்
பாமேரார் பணி மங்கள திருப் பஜ

பதாம்புய மடியவர்க்கருள்
கதாயுதந்திருக் கரமதில் இகழ் பஜ

பகர்மாமுகில் நிகர்சாமள
விலைசேர்துழ வணிகோமள பஜ

பரமபாதமருளு மோன
கிருபைசெரும் வரத ஞான பஜ

படியாவுமோ ரடியிலமழ்க்
திடுமாதவ வரிகேசவ பஜ
பதபாமக தனிலாதவ
குலதாரக ஜெபசோபன பஜ
பதத்தினைத் துதித்திடச்
ஜகத்தினி விசைப்பிரதம பஜ
பாடுங்கள் பக்த்தர்வணங்கும் ராகவன்கீதம்
நாடுங்கள் சித்தர்வணங்கும் நாரணன் பாதம் பஜ
பத்துச்சிறம் ராவணனையோர் சாத்தில்
கொத்துடன் கொய்திடுங் கூர்மதேவ • பஜ
பார்மிக்க பக்ததிமிகுஞ்
சிறொக்கும் விஸ்வகுல
பாலன்கோபாலன் வாக்கியம் மா

---

ஆசிரிய விருத்தம்.

நந்தகோவிந்த வைகுந்த நாராயணு
நாகசயனு பாகவா
நறுந்துளவணிந்தவா நவநீதமுண்டவா
நான்முகனை யீன்றநாபா
சந்தணமணிந்திலகு ஜானகிமாணுள மா
சாயுச்ய யோகநேமா
சகலகணரக்ஷகா சங்குசக்ராதரா
சற்ஜனர்கள் போற்றுநாதா
கந்தமலர்சேர்கர்ப்ப கக்ரா வைமங்கையின்
கைமீது தந்த கண்ணு
கரியழைத்திடவந் திரக்ஷித்த உத்தமா
காட்டினில் நடந்த பூமா
இந்தைதனிலுன்பாத மென்னுளநம்பினேன்
சித்தம் வைத்தென்னையாள்வாய்
திருவணுமலைமீது வருஸ்ரீனிவாசகா
தெய்வீக யோகமுதலே

---

யெப்புடு கிருபைகல்குனோ—என்ற மெட்டு

பல்லவி

எப்போ நின் கிருபை நல்குமோ
இரவிகுல ஸ்ரீராமா (எ)

அனுபல்லவி

செப்பரிய தேவர் போற்றும்
செந்தாமரைப் பூம்பாதா
தப்பிதஞ் செய்திருந்தாலும்
சுவாமி பொருப்பீரய்யா (எ)

சரணம்.

அன்னை தந்தை குருதெய்வம் ஆதாரமெந்தனுக்கு
உன்னை யன்றி வேறேதெய்வம் உண்டோ உலகின் மீதில்
புன்னகசயனுவுந்தன் பங்கயக் கண்ணேக்குவாயே (ஏ)
கரியமுகில் வண்ணனே கமழ்கமலக் கண்ணனே
திருமகிழும்லோலனே தேவகியின் பாலனே
சரணஞ் செய்யுங் கோபால தாசன் தனைரக்ஷிக்க (ஏ)

---

இராகம் ஆனந்தபயிரவி தாளம் சாப்பு

பல்லவி.

வந்தருள் செகுராமா இந்த வேளையில் (வந்

அனுபல்லவி.

கந்தமலர்ப்பாதனே காஞ்சிபுரிநாதனே
சந்ததமும் பணியுந்தாசன் கோபாலக்கருள (வந்

சரணம்.

பக்தர் தொழுமுல்லாசா பார்மின்மகிழ்ப்ராணேசா
அத்தன்புகழ் சர்வேசா ஆதியேதிருநேசா
அன்றுயானை யழைத்தபோதினில்
சென்று அவ்விடர் தீர்த்த ஸ்ரீதரா
குன்றினைக் குடையாய்ப் பிடித்துமே
கோவினங்களைக்காத்த சுந்தரா (வந்
தேவகியருள்பாலா தேவர்கட்கநுகூலா
பூவை ருக்மணிலோலா பூஜிதர் போற்றுஞ்சீலா
புங்கவர் தொழும் புண்யனே மிகு
துங்கமேவிய துளவணிந்தவா
சங்கைதேவி சகோதராவருள்
கண்ணனே மணிவண்ணனே யின்று (வந்

---

சன்னதி விஷேடமே---என்ற மெட்டு

பல்லவி.

சாமள சொரூபனே
சங்கு சக்கர தூரோணவாழ்கதை
பங்கயக்கம் மீதிலேந்திய (சா

அனுபல்லவி

கோமள மெய்யாராதீரா குவலயம்பணிகெம்பீரா
வாமன ரூபலங்காரா
வரதமுரகரி சுரர்கள் துதிபுரி
பரமபத நக ருரையுமரிகரி (சா

சறணம்.

பூதலத்தோர்வந்துபோற்றும் பூம்பாதமெனக்குத் தோற்றும்
போதவமிலங்கச் சாற்றும்
போதிலயநிரு பாதமலர் தொழ
வேதமுடிவிநின் மீது நடமிடு (சா

மாபலா கொய்யா மணக்கும் மாமலர் பொருந்தி நிற்கும்
தேம்பொழில் குயிலிசைக்கும்
திருதுருந்த நன் னகரிருந்தருள்
வரதசெந்திரு மருவிடும்புய (சா

கோசலை மகிழும்பாலா கோகனக மர்துலோலா
தாசன் கோபால் போற்றும் சீலா
தரணிமிசைதிட இரணியனையடர்
கருணையரியுரு மருவும் வரதனே (சா

ஆதவ குலசோமா என்ற மெட்டு.

கண்ணிகள்.

தேவகியருள் பாலா மலர் பூவை ஜானகி லோலா
யெழில் காவலர் தொழுஞ்சீலா
யெழில் காவலர் தொழுஞ்சீலா (தே

பாண்டவர் குணபூமா யெனையாண்டருள் நன்மனமா
உனை வேண்டினே னரிராமா
உனை வேண்டினே னரிராமா (தே

தாரணிதொழும்பாதா நமோ காரணவருள்தாதா
பரிபூரண குணநீதா
பரிபூரண குணநீதா (தே

கோமளத் திருமாரா அருள் சாமள ஓய்யாரா
திருமாமகள் சிங்காரா
திருமாமகள் சிங்காரா (தே

விண்ணவர்க்குபதேசா மலர்க்கண்ணனே ஸ்ரீனிவாசா
துதிபண்ணுங் கோபால்க் கருளீசா
துதிபண்ணுங் கோபால்க் கருளீசா (தே

---

கதனகுது கல ராகப்பிரிய என்ற மெட்டு.

பல்லவி.

புவனதரு புண்ணியவேணுகியான
புங்கவர்கள் தங்கும் பூமகளிலங்கும் (புவ

அனுபல்லவி.

துவாரகாபுரி சாமள முராரி
துங்கமேமத்துப்பும் இங்கிதர்ப்பெருகும் (புவ

சரணம்.

யெத்தினமும் நானே நத்தினேன் பூமானே
இத்தருணந்தானே இரச்சிப்பாய் பெருமானே
பக்தன் கோபாலனை பணிந்தேன் சதா
பார்மகள் வணங்கும் பண்டரி ஸ்ரீகண்ணு (புவ

---

இன்னம் பருமுகஞ்செய்பலாம் என்ற மெட்டு.

பல்லவி.

கார்நிகர் சாமளப் பிரகாசனே—வருள்
காருண்யனே பாண்டவர் நேசனே

அனுபல்லவி.

பார்மகள் லோலனே பரமதயாழனே
பச்சமைத் தெந்தனே யாள்சர்வேசா ஜெக
ரச்சகனே குருந்த நகர் வாசா
தேவகி பாலனே சிவன்சிலனே
சித்தர் முனிவர் தொழும் பரந்தாமா வரி
பக்தன் கோபாலன் தமிழ்க்கருள் தாமா

---

சித்தானந்தா குகா மேய் என்ற மெட்டு

பக்த்தானந்தா திருமெய்ப் பண்டரி வாழு மீசா
பரமாத்மனே சற்வேசா பாண்டவர் தங்கள் நேசா (பக்
சித்தாநந்தா தேவாமா சீதா மகிழ் சமேதா
நாதா கருணை தாதா வேதா வணங்கும் பாதா (பக்

தினமும் மங்களாகா மும்பெருகும்
திருமகளு மென்னும் வளரும்
திருவடி பத நிழல் தருகுவாய்
பரமபதசுக மதைத்தருகுவாய் (பக்

தொகையரு.

கமழ் துழபமார்பனே பார்க்கடல் துயின்றவா
கரியமுகில் மேனிவண்ணு
தமதனே யசோதை கையடி புண்டகேசவா
தற்பரா சீதமன்னு

பாட்டு.

தீனர்கள் தொழுந் ஞான சற்குணு
வானவரிடர் தீர்த்த சுந்தரா
சிறுவன் கோபாலன-தினமும் துதித்தேன் (பக்

---

கந்தா கரருண்யனே என்ற மெட்டு.

தேவா சீதாவே திகழ் சாமளனே (தே
காவா மாதவனே கழல்போற்றிநேனே

அனுபல்லவி.

ஆதவகுலத்தில் வந்த அய்யனே
மலர்க் கையனே

தொகையரு

பாண்டவா சகாயனே காழிங்க நிர்த்தனு
பரம்பொருள் வணங்கு சீலா
வேண்டிநே னென்னுளும் வேணுகோபாலனே
விமலனே சீதைலோலா

பாட்டு

விண்ணோர்க் கனுகலனே
மேதினி நா தனே

கண்ணுக்க சவனே கருணா கானே
கோபாலன் தினந் தொழுங்
கோவிந்தனே சோதைமைந்தனே
இன்னம் தாமதமா யென்னையாள் ராமா
கண்யா தயவில்லையா காருணைசெய் பூமா தேவா

---

நீ நாம ரூப மூலகு யென்ற மெட்டு

பல்லவி.

ஆதார சகல தேவ அமிர்தகான மங்களம்

அனுபல்லவி.

தேவர்தி தேவருக்குளும் திவ்ய சடகோபார் திகளும்
ஸ்ரீ ஞான விஷ்ணுகீத கீர்த்திரமண மங்களம்
வேதாந்த விஸ்வ கோதப விகிதகோபால்கீர்த்தனைக்கும்
சாதாந்த முனிவரமாரட்புளோர்க்கு மங்களம் (ஆதா)

வாழி விருத்தம்.

சந்திதம் பக்த்தர் போற்றுஞ சடகோபர் வாழி வாழி
விந்தை சேர்தமிழ வணிந்த விஷ்ணு கோபாலர் வாழி
செந்திரு வழருமிகக திருவிண்ணு மலையான் வாழி
சிந்தையில் விஷ்ணு கியானஞ் செப்பினோர் வாழியாமே

இங்கிதகான சங்கீத விஷ்ணு கியானம்,
முதல்பாகம் முற்றிற்று.

இரண்டாம் பாகம் கூடியசீக்கிரம் வெளிவரும்

7626